செய்தி வெளியீடு எண்– 539 நாள்–7.7.2008

# 3000 கோடி ரூபாய் முதலீட்டில்<br>சென்னை ஒரகடத்தில் புதிய சரக்கு வாகனத் தொழிற்சாலை

## முதலமைச்சர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

ஜெர்மன் நாட்டைச் சார்ந்த டெய்ம்லர்–ஏஜி நிறுவனம், மெர்சிடிஸ் பென்ஸ், ஃப்ரைட்லைனர், ஃப்யூசோ, செட்ரா போன்ற உலகப் புகழ் வாய்ந்த சீருந்துகள், சரக்கு வாகனங்கள், ஊர்திகள் மற்றும் பேருந்துகளைத் தயாரிக்கும் நிறுவனமாகும். இந்தியாவைச் சார்ந்த மதிப்பு வாய்ந்த ஹீரோ குழுமம், உலக அளவில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்களைத் தயாரிக்கும் நிறுவனமாகும். இந்தியாவில் சரக்கு வாகனங்களைத் தயாரிப்பதற்காக, கூட்டு முயற்சியில் டெய்ம்லர்–ஏஜி மற்றும் ஹீரோ குழுமம் ஆகிய இரண்டு நிறுவனங்களும் இணைந்து 'டெய்ம்லர் ஹீரோ வணிக வாகனங்கள் நிறுவனம்' என்னும் நிறுவனத்தை அமைத்துள்ளன.

இந்நிறுவனம் ஆண்டொன்றுக்கு 70 ஆயிரம் சரக்கு வாகனங்களைத் தயாரிக்கும் பொருட்டு, ஐந்தாண்டு கால அளவில் 3000 கோடி ரூபாய்க்கும் மேலான முதலீட்டில் சிப்காட் ஒரகடம் தொழில் பூங்காவில் தனது தொழிற்சாலையை அமைக்கிறது. இந்த முதலீடு அடுத்த சில ஆண்டுகளில் 4000 கோடி ரூபாய் அளவுக்கு உயரக்கூடும். இத்திட்டம் முழுத்திறனுடன் செயல்படும்போது ஏறத்தாழ 3000 பேருக்கு நேரடியாகவும், 20 ஆயிரம் பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகளை உருவாக்கும். ஜெர்மனி நாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு இதுவரை வந்துள்ள முதலீடுகளில் இது பெரிய முதலீடாகும். ஜெர்மனியிலிருந்து வெளிநாட்டு நேரடி முதலீடுகளைத் தமிழ்நாட்டிற்கு ஈர்ப்பதில் உதவியாக அமையும். ஏற்கனவே ஃப்ரான்ஸ் நாட்டைச் சார்ந்த ரெனால் நிறுவனமும், ஜப்பான் நாட்டைச் சார்ந்த நிசான் நிறுவனமும் இணைந்து, ஒரகடம் தொழில் பூங்காவில், ஒருங்கிணைந்த மோட்டார் வாகனத் தொழிற்சாலைத்

திட்டம் ஒன்றினை அமைத்து வருகின்றன. மேலும், ஹுண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனமும், தனது உற்பத்தி வசதிகளைப் பெரிய அளவில் விரிவாக்கம் செய்து வருகிறது. டெய்ம்லர், ஹீரோ நிறுவனத்தால் சரக்கு வாகனத் தொழிற்சாலை அமைக்கப்படவுள்ளதால், சீருந்துகள் உள்ளிட்ட வணிக வாகனங்கள் தயாரிப்பில் சென்னையின் தகுதி மேலும் உயரும்.

இத்தொழிற்சாலை அமைக்கப்படுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் இன்று (7.7.2008) நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பாக தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு. எம்.ப். ஃபரூக்கி, இ.ஆ.ப. அவர்களும், ஜெர்மனியின் டெய்ம்லர்–ஏஜி நிறுவனம் சார்பாக அந்நிறுவனத்தின் இயக்குநர் குழு உறுப்பினர் திரு. ஆன்ட்ரியாஸ் ரென்சியர் அவர்களும், ஹீரோ குழுமத்தின் சார்பாக ஹீரோ நிறுவனப் பணிகளின் தலைவர் திரு. சுனில் காந்த் முஞ்சால் அவர்களும், டெய்ம்லர்–ஹீரோ வணிக வாகனங்கள் நிறுவனம் சார்பாக அந்நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் திரு. மார்க் லிஸ்டோசெட்டா அவர்களும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு நா.வீராசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.துரைமுருகன், தலைமைச் செயலாளர், திரு. எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., நிதித் துறை முதன்மைச் செயலாளர் திரு. கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., சிப்காட் மேலாண்மை இயக்குநர் திரு.என்.கோவிந்தன், இ.ஆ.ப. ஆகியோரும் டெய்ம்லர்–ஏஜி ஹீரோ குழுமத்தின் மூத்த அலுவலர்களும் உடன் இருந்தனர்.

***

வெளியீடு – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.